செய்தி வெளியீடு : 697 நாள் – 9.10.2009

# ஆவின் நிறுவனத்தின் 6 ஆயிரத்து 757 பணியாளர்களுக்கு 5 கோடியே 67 இலட்சம் ரூபாய் போனஸ்!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம், மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆவின் நிறுவனப் பணியாளர்கள் 6 ஆயிரத்து 757 பேருக்கு 2008–2009 ஆம் ஆண்டிற்காக 8.33 சதவீத போனஸ் மற்றும் 11.67 சதவீத கருணைத் தொகை சேர்த்து 20 சதவீத போனஸ் தொகையாக மொத்தம் 5 கோடியே 67 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய் வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணையின் காரணமாக தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தில் பணிபுரியும் 2 ஆயிரத்து 535 பணியாளர்களும், மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களில் பணிபுரியும் 4 ஆயிரத்து 222 பணியாளர்களும் ஆக மொத்தம் 6 ஆயிரத்து 757 பணியாளர்கள் பயனடைவார்கள்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9